

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க எஸ்.ஐ.ஆர். வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டுக்கு பின் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பான மதுரை வடக்கு மாவட்ட கழக செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், மாவட்ட பொருளாளர் சோமசுந்தரபாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கரு தியாகராஜன், தனச்செல்வம், புதூர் சேகர், மாநில அணி நிர்வாகிகள் கணேசன், மதுரை பாலா, தொகுதி பொறுப்பாளர்கள் சுப.த.சம்பத், ஆனந்த், விஜயகதிரவன், உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் என ஏராளமானோர் பங்கேற்றனர்



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டுக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பான மதுரை மாநகர் மாவட்ட செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திடக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராம், மாநில தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன், தொகுதி பொறுப்பாளர் தேனி ஜெயக்குமார் உள்ளிட்டோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் மூவேந்திரன், ராகவன், முருகவேல் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம்,பாகம் எண் : 220,221 வேம்பாரில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்வில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, இம்மானுவேல், மாவட்ட பிரதிநிதி செந்தூர்ப் பாண்டியன், வடக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் அந்தோணிராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆரோக்கியராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய செயலாளர் பா.பாபு தலைமையில் பஞ்சலிங்கபுரம் ஊராட்சி, சுண்டன்பரப்பு ஊர் சமுதாய நலக்கூடத்திற்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஸ்டீல் மேஜைகளை வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியின் இறுதியில் கன்னியாகுமரி நகர பா.ஜ.க. தலைவர் ஜெய ஆனந்த் தன்னுடைய ஆதரவாளர்களுடன் அக்கட்சியிலிருந்து விலகி மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தி.மு. கழகத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் ஊர் தலைவர் பெரியசுவாமி, தனபால், வினோத், நிஷார், அன்பழகன், பிரேமலதா உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.




தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்கத் தயாராகிறது

முரசொலி

பொங்கல் மலர்
2026

ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...

விலை ரூ.150/-

